**கேகாலை பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

-----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூன் 30 ஆந் திகதியன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜுன் 28 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களினாலான தாக்கங்களைத் தவிர, நிதிசார் கூற்றுக்களில் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கேகாலை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு ஏற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பிரசித்த ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்பட்ட உடம்பா சியம்பலாபிட்டிய எனும் காணியில் சபைக்கு உரித்துறுதி மூலம் ஒப்படைக்கப்பட்ட ரூபா 250,000 பெறுமதியான 1 ஏக்கர் காணியானது கணக்கிலிடப்படாமையால், மீளாய்வாண்டினது டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலையான சொத்துக்களது பெறுமதி அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) உள்ளுராட்சி அமைச்சரின் அங்கீகாரமின்றி தீர்வை வரி நிலுவையாகிய ரூபா 1,843.70 மீளாய்வாண்டின்போது பதிவழிக்கப்பட்டமையால் பெற வேண்டிய தீர்வை வரி அதேயளவு பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 03 கணக்கீட்டு விடயங்களது மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,358,049 ஆகும். அவற்றுடனொத்த உபபதிவேடு / அறிக்கைகளின் பிரகாரம் கணக்கீட்டு மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 8,250,852 ஆகியமையால் ரூபா 107,197 வித்தியாசம் நிலவியது.

(ஆ) நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 9,362,325 பெறுமதியான 14 காணி மற்றும் கட்டிடங்கள் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்படாமையால் கணக்கறிக்கையின் பட்டோலையுடன் சொத்துப் பதிவேடு இணக்கமுறாதிருந்தது.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

(அ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பெற வேண்டிய கணக்கு மீதிகளது பெறுமதி ரூபா 61,278,565 ஆகும். அதில் ரூபா 17,433,048 ஓராண்டிற்கு மேற்பட்ட பழமை வாய்ந்தனவாகும்.

(ஆ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்கு மீதிளது கூட்டுத் தொகை ரூபா 25,876,320 ஆகும். அதில் ரூபா 3,498,821 ஓராண்டிற்கு மேற்பட்ட பழமை வாய்ந்தனவாகும்.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

கீழே காணப்படும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) சபரகமுவ மாகாண சபையின் நிதிசார் விதிக் கோவை | |
| 261.2.7 ஆம் விதி | எவ்வகைக் கட்டு நிதியாயினும், அது வழங்கப்பட்ட நிதியாண்டின் டிசெம்பர் 31 க்கு மேல் தாமதிக்கப்படக்கூடாது எனக் கூறப்பட்டுள்ளபோதும், 2005 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளாகிய இரு ஆண்டுகளிலும் 10 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 143,908 முற்பணமானது 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்து வைக்கப்படாதிருந்தது. |
| (ஆ) ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் 2011 யூலை 20 ஆந் திகதிய 2/2011(திருத்தம்) ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கை | அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்யப்பட்டிருந்தும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் ரூபா 12,345 பங்களிப்பாக சபையின் நிதியிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 22,502,259 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 17,525,581 ஆகியமையால் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேறுகளில் ரூபா 4,976,678 முன்னேற்றம் தென்படுகின்றது.

**2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு**

நிதிப் பெறுபேறுகளின் ரூபா 4,976,678 அதிகரிப்பிற்கு 05 வருவாய் விடய அதிகரிப்பும் 05 செலவின விடயக் குறைவும் பிரதான காரணிகளாகின.

**2.3 வருவாய் நிர்வாகம்**

**2.3.1 வருவாய்ச் சேகரிப்பிலான செயலாற்றல்**

செயலாளரால் மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் வருமாறு.

| | வருவாயினது தோற்றுவாய் | 2015.01.01 இல் உள்ளவாறான நிலுவை | 2015.12.31 இல் உள்ளவாறான நிலுவையில் அறவீடு | 2015 ஆம் ஆண்டிற்கான பட்டியல் தொகை | ஆண்டிற்கான பட்டியலில் அறவீடு | 2015.01.01 இல் உள்ளவாறான நிலுவை மீதி | ஆண்டிற்கான பட்டியலிடப்பட்ட தொகையில் நிலுவை | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2015.12.31 இல் உள்ளவாறான நிலுவை | | | |
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வை வரி | 430,182 | 195,120 | 583,420 | 428,574 | 235,062 | 154,846 | 389,908 |
| (ii) | குத்தகை வாடகை | 131,655 | 36,932 | 261,110 | 132,367 | 94,723 | 128,743 | 223,466 |
| (iii) | ஏனைய வருவாய் | 11,811,770 | 4,881,237 | 12,500,000 | - | 6,930,533 | 12,500,00 | 19,430,533 |
| (iv) | நீதிமன்றத் தண்டப் பணம் | 6,863,533 | - | 9,000,000 | - | 6,863,533 | 9,000,000 | 15,863,533 |
| (v) | வருவாய் உதவி | 2,097,822 | 2,097,822 | 28,119,186 | 26,021,454 | - | 2,097,732 | 2,097,732 |

**2.3.5 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய தொகை பின்வருமாறு.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 15,863,533 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 19,430,533 |

**2.3.6 ஏனைய வருவாய்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) WPZH - 5059 ஆம் இலக்கமுடைய பெக்கோ லோடர் இயந்திரத்தின் 2015 யூலை முதல் 28 டிசெம்பர் வரையான ஓட்ட அட்டவணையின் பிரகாரம் 45 மீட்டர் மணி வாடகை அடிப்படையில் அது சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. எனினும், இயந்திரத்தை வாடகைக்கு வழங்கும் பதிவேட்டின்படி 30 மீட்டர் மணித்தியாலங்களுக்கு மாத்திரமே கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, 15 மீட்டர் மணித்தியாலங்களுக்கு ரூபா 36,000 அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டின்போது சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த 26 விளம்பரம் பலகைகளுக்கு ரூபா 136,950 அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) குத்தகை உடன்படிக்கைப்படி காலத்துக்குக் காலம் கடை வாடகை அறவிடப்படாமையால் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பொதுச் சந்தையின் 2 கடைகளிலிருந்து ரூபா 121,960 அறவிடப்படாதிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 1989 ஆம் ஆண்டு முதல் மின்சாரக் கட்டண நிலுவையாகக் கணக்குகளில் காட்டப்படும் ரூபா 463,142 தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) சபையின் தலைவர் பதவியில் பணியாற்றிய மூவருக்கு வழங்கப்பட்ட ரூபா 60,056 பெறுமதியான 03 தொலைபேசிகள் பதவி நீங்கிய 1 முதல் 10 ஆண்டு நிறைவடைந்திருந்த நிலையிலும் அவற்றைத் திருப்பிப் பெறுவதற்கோ அல்லது சேவையைத் துண்டிப்பதற்கோ நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்தது.

(இ) கேகாலை மாவட்ட சுகாதார வைத்திய உத்தியோகத்தரது 2015 பெப்ரவரி 03 ஆந் திகதிய சு.வை.உ.கே/2014 எனும் கடிதத்தின் பிரகாரம் கழிவுகளை அகற்றுவதற்கான நிலையம் ஒன்றிற்கான பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் சிபாரிசு பெறப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதும் அவ்வாறான சிபார்சின்றி 2015 ஆம் ஆண்டின் போது 40 சந்தர்ப்பங்களில் பவுசர் மூலம் கழிவுகள் அகற்றப்பட்டிருந்தன.

(ஈ) 2015 ஆம் ஆண்டின்போது காணிகளைக் கூறுபடுத்தும் திட்டத்திற்கான அங்கீகாரத்துடன் பிரசித்த ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்பட்ட 2 காணிகளுக்குச் சபையின் வருவாய்ப் பரிசோதகர்களது தற்காலிக மதிப்பீட்டின் அடிப்படையில் முற்பணம் பெறப்பட்டிருந்தபோதும், காணிகைளக் கூறுபடுத்தி விற்பனை செய்தமையால் பெற்ற உள்ளவாறான பெறுமதியைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(உ) 2015 ஆம் ஆண்டில் 04 அத்துமீறிய நிர்மாண வேலைகள் தொடர்பாக சபை வெளியிட்ட கட்டளை அத்துமீறிக் குடியோரினால் அமுலாக்கப்பட்டதா என்பதை அறிதற்கான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

### 3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2013 ஏப்ரல் 22 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 5/2013 ஏற்பாடுகளின் பிரகாரம் சாரதிகளுக்கும் சிற்றூழியர்களுக்கும் சீருடை மற்றும் தையல் கூலியாக ரூபா 4,000 வீதம் வழங்கப்பட வேண்டுமாயினும், சாரதி அடங்கலான சிற்றூழியர் 04 பேருக்குக் குறித்த தொகைக்கு அதிகமாக ரூபா 3,265 மற்றும் 27 பேருக்கு குறித்த தொகையிலும் பார்க்க ரூபா 43,207 குறைவாகவும் வழங்கப்பட்டிருந்தது.

### 3.3 இனங்காணப்பட்ட நட்டம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2006 ஆகஸ்ட் முதல் 2010 யூலை வரையான காலத்தின் பொருட்டு சபையின் 2 ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியத்திற்கு உதவு தொகையை வழங்குவதைப் புறக்கணித்தமை தொடர்பாக கேகாலை மஜிஸ்டிரேட் நீதிமன்றத்தின் 26684/14 ஆம் இலக்க வழக்கினது தீர்புக்கமைய ரூபா 211,257 தண்டப் பணமாக வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) நிரந்தர, ஓய்வூதியததிற்குரிய 05 ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ரூபா 22,704 ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ரூபா 5,676 எனக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டிலும் கூடுதலாக 23 செலவின விடயங்களுக்கு ரூபா 22,709,500 செலவழிக்கப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருவாய் நிர்வாகம்
(ஈ) கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(உ) சொத்து முகாமைத்துவம்